Chapter XX*III Code of Criminal Procedure)*

| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
|---|---|---|---|
| Calendar | | SC.No.375/2023 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W. 7 |
| | | Defence | |
| Name | | திருமதி.ஜீவா | |
| Husband's Name | : | திரு.செல்லத்துரை | |
| Village | : | ராஜாபுதுக்குடி | |
| Taluk | : | கயத்தார் | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி | |
| Age | : | 34 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 1st day of July 2026.

(1, 2 எதிரிகள் ஆஜர். இன்றையதினம் Additional Public Prosecutor யாரும் நியமிக்கப்படாத நிலையில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பழனி அவர்கள் முன்னிலையாகி சாட்சிகளை அடையாளம் காட்டி எதிரிகளின் வழக்கறிஞர் ஒப்புதலுடன் சாட்சி விசாரிக்கப்படுகிறது. )

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது ராஜாபுதுக்குடியில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன ஜேக்கப் ஆனந்தராஜ் என்பவரை எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் ஆஜரான எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியாது. நான் திருநெல்வேலி கேட்டரிங் தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. இது சம்மந்தமாக

போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு அனுமதி வழங்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)</u>

என்னை போலிசார் விசாரித்த போது, நான் எனது கணவருடன் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வந்து திருநெல்வேலி கேட்டரிங் தொழில் செய்து வரும்போது 2 வது எதிரி எனக்கு பழக்கமானது என்றும், 17.11.2022 ம் தேதி எனது அண்ணனுடன் எனக்கு சண்டை ஏற்பட்டு நான் வீட்டை விட்டு வெளியே வந்து 2 ம் எதிரிக்கு போன் செய்து அவர் வரச்சொன்னதால் அவரது வீட்டில் சென்று தங்கியிருந்தேன் என்றும், அவர் நடனவகுப்பிற்கு செல்லாத நாட்களில் நான் பள்ளிக்கூடங்களுக்கு சென்று நடனவகுப்பு நடத்தி வந்தேன் என்றும், நான் 22.11.2022 ம் தேதி காலை 10.30 மணிக்கு பாலமடை ஜோசப் ஸ்கூலுக்கு சென்று நடனபயிற்சி வகுப்பை முடித்துவிட்டு மாலை 5.00 மணிக்கு வீட்டிற்கு வந்தபோது 2 ம் எதிரி என்னை வீட்டிற்குள் விடமால் பிரின்ஸ் என்பவரை பஸ் ஸ்டாப்பில் இறக்கிவிடச் சொன்னதால் நான் அவரை இசக்கியம்மாள் கோயில் பஸ் ஸ்டாப்பில் இறக்கி விட்டு வரும்போது தேவியின் கணவர் என்னிடம் சண்டை போட்டார் என்றும், பிறகு நான் வீட்டிற்கு வந்தபோது ஒரு துணி மூட்டையை ஏற்றி ஆற்றிற்கு போகவேண்டும் என்று சொல்லி 2 ம் எதிரி இருசக்கர வாகனத்தை ஓட்டினார் என்றும், நான் பின்புறமாக அமர்ந்து கொண்டேன் என்றும்,

ஆனால் அவர் அங்கிருந்து பேட்டை ரயில் நிலையத்திற்கு சென்றார் என்றும், அங்கு வண்டியை நிறுத்திவிட்டு நானும், 2ம் எதிரி தேவியும், 1ம் எதிரி மாலை 6.30 மணிக்கு செங்கோட்டை ரயிலில் ஏறி சேரன்மகாதேவி ரயில் நிலையத்தில் இறங்கினோம் என்றும், அங்கு பப்ஸ் சாப்பிட்டுவிட்டு இரவு 7.30 மணிக்கு சேரன்மகாதேவியில் இருந்து பேட்டை ரயில் நிலையத்தில் இருந்து இறங்கி இருவரும் தேவி பைக்கை ஓட்ட நான் பின்புறம் அமர்ந்துகொண்டு வீட்டிற்கு சென்றோம் என்றும், அன்று இரவு 10.30 மணி வரை பேசிக்கொண்டிருந்தோம் என்றும் நான் பாய்யை எடுத்துக்கொண்டு கீழே படுக்க சென்றபோது அவர் என்னை கட்டிலில் படுக்கசொல்லிவிட்டு தூங்கிவிட்டோம். பின்னர் 23.11.2022ம் தேதி காலை 7.30 மணிக்கு எழுந்தபோது தேவியும், பைக்கும் வீட்டில் இல்லை என்பதால் அவருக்கு போன் செய்தபோது அவர் ஆற்றிற்கு குளிக்கசென்றதாக சொன்னார் என்றும், பின்னர் அவர் பிரஞ்சேரி ஸ்கூலில் நடனவகுப்பு எடுத்துக்கொண்டுயிருப்பதாக சொல்லிவிட்டு 10.30 மணிக்கு வீட்டிற்கு வந்தார். பிறகு மாலை 5.00 மணிக்கு நான் ஜோசப் பள்ளியில் நடனவகுப்பு முடித்து வீட்டிற்கு வரும்போது நானும், அவரும் பேட்டை ரயில் நிலையத்திற்கு பைக்கில் சென்றோம் என்றும் அங்கிருந்த 1ம் எதிரி பைக்கை வாங்கி ஓட்ட நானும், 2ம் எதிரி தேவியும் பின்னால் அமர்ந்து புது பஸ் ஸ்டாண்டு சென்றோம். அங்கிருந்து திருச்செந்தூர் செல்வதற்காக பஸ்சில் சென்றோம். நான் குரும்பூரில் இறங்கிக்கொண்டு ஆத்தூரில் உள்ள எனது நண்பர் அஜீத் என்பவர் வீட்டிற்கு சென்று தங்கிவிட்டு 24.11.2022ம் தேதி காலை 9.30 மணிக்கு ஆத்தூரில் இருந்து கிளம்பி திருச்செந்தூர்

கோவில் மண்டபத்திற்கு வந்து படுத்து தூங்கிவிட்டு மதியம் 3.30 மணியளவில் எதிரிகள் இருவரும் ஒரு தாத்தாவை காணவில்லை என்று பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும் அது சம்மந்தமாக போலிசார் எங்களை விசாரிக்கவேண்டும் என்று சொன்னார்கள் என்றும், என்னை கேட்டால் எனக்கு எதுவும் தெரியாது என்று சொல்வேன் என்று சொன்னேன் என்றும், பின்பு திருச்செந்தூரில் இருந்து ரயிலில் ஏறி பாளையங்கோட்டை ரயில் நிலையத்திற்கு வந்து வண்டியை எடுத்துக்கொண்டு நாங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டோம். நான் அன்று எனது உறவினர் வீட்டிற்கு சென்றுவிட்டேன். போலீஸ் விசாரணையில் எதிரிகள் ஜேக்கப் ஆனந்தராஜை கொலை செய்து கட்டிலுக்கு அடியில் மறைத்துவைத்து இரவு நேரத்தில் குளத்துக்கரையில் கொண்டுபோய் போட்டுவிட்டதாக கேள்விப்பட்டேன் என்று சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

மறுவிசாரணை இல்லை.

Chapter XX*III Code of Criminal Procedure)*

| | | | |
|---|---|---|---|
| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
| Calendar | | SC.No.375/2023 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W. 8 |
| | | Defence | |
| Name | | திரு.சரவணன் | |
| Father's Name | : | திரு.பாலகிருஷ்ணன் | |
| Village | : | நரசிங்கநல்லூர் | |
| Taluk | : | திருநெல்வேலி | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி | |
| Age | : | 46 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 1st day of July 2026.

(1, 2 எதிரிகள் ஆஜர். இன்றையதினம் Additional Public Prosecutor யாரும் நியமிக்கப்படாத நிலையில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பழனி அவர்கள் முன்னிலையாகி சாட்சிகளை அடையாளம் காட்டி எதிரிகளின் வழக்கறிஞர் ஒப்புதலுடன் சாட்சி விசாரிக்கப்படுகிறது. )

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது நரசிங்கநல்லூாில் குடியிருந்து வருகிறேன். தற்போது நரசிங்கநல்லூாில் நான் கிராம உதவியாளராக வேலை பார்க்கிறேன். நானும், கிராம நிர்வாக அலுவலரும் அலுவல் ரீதியில் இருந்தபோது சத்யாநகர், குளக்கரையில் 21.11.2022 அன்று காலை 11.00 மணியளவில் ஒரு ஆண்பிணம் இறந்துகிடப்பதாக

கிடைத்ததகவலின்பேரில் அங்கு சென்றுபார்த்தபோது கை, கால்கள் இல்லாமல் நீரில் உப்பிப்போய் புழு வந்தநிலையில் கிடந்தது. அங்கு விசாரித்தபோது யாருக்கும் தெரியவில்லை என்பதால் கிராம நிர்வாக நிர்வாக அலுவலர் பேட்டை காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னார். பின்னர் போலிசார் பிரேதத்தை கைப்பற்றி விசாரணை செய்தார்கள். அவர்களுடைய விசாரணை மூலமாக இறந்துபோனவர் அபிஷேகப்பட்டியை சேர்ந்த பாலகிருஷ்ணன் மகன் ஜேக்கப் ஆனந்தராஜ் என்று தெரியவந்தது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :-

நான் போலிசாரிடம் புகார் மனுவிலோ, வேறு படிவங்களிலோ கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கும்போது 21.11.2022 ம் தேதியில் பிரேதத்தை பார்த்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.